


Lords Dr. ம.பால்ராஜ்
Founder | International President

# LORDS TODAY



LORDS TODAY - International Social Media & Magazine
LORDS TODAY RNI Ref. No. 1287921 Title Code : TNBL04354 | Issue : July 2022
WhatsApp : 91-98405 59673 Editor | Publisher & Owner : Lords Dr. M. PAULRAJ
Free for - LORDS | LIONS | ROTARY & All International Social Service CLUBS





2021-16796675768



BIBLE 18



KURAN 18




BHAGAVAD GITA 18

LORDS
CLUBS INTERNATIONAL
International Social Services
Govt. Reg. No. : 1359 / 2013
+91 9840559673 | +91 9790855633

www.lordsclubs.com



# திருக்குறள்



**அதிகாரம் 1 – கடவுள் வாழ்த்து**

**குறள் 1 : அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு**

**விளக்கம் :** எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை அடிப்படையாக கொண்டிருக்கின்றன. அதுபோல உலகம் கடவுளை அடிப்படையாக கொண்டிருக்கிறது.

**குறள் 2 : கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்**

**விளக்கம் :** தூய அறிவு வடிவாக விளங்கும் இறைவனுடைய நல்ல திருவடிகளை தொழாமல் இருப்பாரானால், அவர் கற்ற கல்வியினால் ஆகிய பயன் என்ன?

**குறள் 3 : மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார் நிலமிசை நீடுவாழ் வார்**

**விளக்கம் :** அன்பரின் அகமாகிய மலரில் வீற்றிருக்கும் கடவுளின் சிறந்த திருவடிகளை பொருந்தி நினைக்கின்றவர், இன்ப உலகில் நிலைத்து வாழ்வார்

**குறள் 4 : வேண்டுதல்வேண் டாமை இலானடி சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை இல**

**விளக்கம் :** விருப்பு வெறுப்பு இல்லாத கடவுளின் திருவடிகளை பொருந்தி நினைக்கின்றவர்க்கு எப்போதும் எவ்விடத்திலும் துன்பம் இல்லை

**குறள் 5 : இருள்சேர் இருவினையும் சேரா இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு**

**விளக்கம் :** கடவுளின் உண்மைப் புகழை விரும்பி அன்பு செலுத்துகின்றவரிடம் அறியாமையால் விளையும் இருவகை வினையும் சேர்வதில்லை

**குறள் 6 : பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறிநின்றார் நீடுவாழ் வார்**

**விளக்கம் :** ஐம்பொறி வாயிலாக பிறக்கும் வேட்கைகளை அவித்த இறைவனுடைய பொய்யற்ற ஒழுக்க நெறியில் நின்றவர், நிலை பெற்ற நல்வாழ்க்கை வாழ்வர்

**குறள் 7 : தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால் மனக்கவலை மாற்றல் அரிது**

**விளக்கம் :** தனக்கு ஒப்புமை இல்லாத தலைவனுடைய திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர் அல்லாமல், மற்றவர்க்கு மனக்கவலையை மாற்ற முடியாது

**குறள் 8 : அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால் பிறவாழி நீந்தல் அரிது**

**விளக்கம் :** அறக்கடலாக விளங்கும் கடவுளின் திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர் அல்லாமல், மற்றவர் பொருளும் இன்பமுமாகிய மற்ற கடல்களைக் கடக்க முடியாது

**குறள் 9 : கோளில் பொறியின் குணமிலவே எண்குணத்தான் தாளை வணங்காத் தலை**

**விளக்கம் :** கேட்காதசெவி, பார்க்காத கண் போன்ற எண் குணங்களை உடைய கடவுளின் திருவடிகளை வணங்காதவரின் தலைகள் பயனற்றவைகளாம்

**குறள் 10 : பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவன் அடிசேரா தார்**

**விளக்கம் :** இறைவனுடைய திருவடிகளை பொருந்தி நினைக்கின்றவர் பிறவியாகிய பெரிய கடலைக் கடக்க முடியும். மற்றவர் கடக்க முடியாது

தொடரும்.....

# BIBLE

## மெகா தொடர்
**PART-18**




## தொடக்கநூல் அதிகாரம் 38 திருவிவிலியம்

### யூதாவும் தாமாரும்

1 அக்காலத்தில் யூதா தம் சகோதரர்களை விட்டுப் பிரிந்து ஈரா என்ற பெயருடைய அதுல்லாமியனிடம் சென்றார்.

2 அங்கே சூவா என்ற கானானியன் ஒருவனின் மகளைக் கண்டு, அவளை மணமுடித்து, அவளோடு கூடி வாழ்ந்தார்.

3 அவள் கருவுற்று ஒரு மகனைப் பெற்றெடுத்து, அவனுக்கு ஏர் என்று பெயரிட்டாள்.

4 அவள் மீண்டும் கருவுற்று, ஒரு மகனைப் பெற்றெடுத்து, அவனுக்கு ஓனான் என்று பெயரிட்டான்.

5 கருவளம் மிகுதியாயிருந்ததால் அவள் மேலும் ஒரு மகனைப் பெற்றெடுத்து அவனுக்குச் சேலா என்று பெயரிட்டாள். அவனைப் பெற்றெடுத்தபோது அவள் கெசீபில் இருந்தாள்.

6 யூதா தம் தலை மகன் ஏர் என்பவனுக்குத் தாமார் என்னும் ஒரு பெண்ணை மணமுடித்தார்.

7 யூதாவின் தலைமகன் ஏர் ஆண்டவர் முன்னிலையில் கொடியவனாய் இருந்ததால், ஆண்டவர் அவனை சாகடித்தார்.

8 அப்போது யூதா தம் மகன் ஓனானை நோக்கி, நீ உன் சகோதரன் மனைவியோடு கூடி வாழ். சகோதரனுக்குரிய கடமையைச் செய்து, உன் சகோதரனுக்கு வழிமரபு தோன்றச் செய் என்றார்.

9 அந்த வழிமரபு தனக்குரியதாய் இராதென்று அறிந்து, ஓனான் அவளோடு உடலுறவு கொள்கையில், தன் சகோதரனுக்கு வழிமரபு தோன்றாதவாறு தன் விந்தைத் தரையில் சிந்திவந்தான்.

10 அவன் செய்தது தம் பார்வையில் தீயதாய் இருந்ததால், ஆண்டவர் அவனையும் சாகடித்தார்.

11 ஆதலால், யூதா தம் மருமகள் தாமாரை நோக்கி, என் மகன் சேலா பெரியவனாகும் வரை உன் தந்தை வீட்டில் விதவையாய்த் தங்கியிரு என்றார். ஏனெனில், அவனும் தன் சகோதரரைப் போல் சாவானோ என்று அஞ்சினார். தாமாரும் அவ்விதமே தம் தந்தை வீட்டிற்குச் சென்று அங்குத் தங்கியிருந்தார்.

12 பல நாள்களுக்குப்பின், சூவாவின் மகளான யூதாவின் மனைவி இறந்தாள். யூதா அவளுக்காகத் துக்கம் கழித்தபின், தம் மந்தைக்கு உரோமம் கத்தரிப்பவர்கள் இருந்த திம்னாவுக்குத் தம் அதுல்லாமிய நண்பன் ஈராவுடன் சென்றார்.

13 அப்போது உன் மாமனார் தம் ஆடுகளுக்கு உரோமம் கத்தரிக்கத் திம்னாவுக்குப் போகிறார் என்று தாமாருக்குச் செய்தி அறிவிக்கப்பட்டது.

14 சேலா பெரியவனாகியும் தம்மை அவனுக்கு மனைவியாகக் கொடுக்கவில்லை என்று

# BIBLE




அவர் கண்டு தமது கைம்மைக் கோலத்தைக் களைந்துவிட்டு, முக்காடிட்டுத் தம்மை மறைத்துக்கொண்டு திம்னாவுக்குச் செல்லும் பாதையில் இருந்த ஏனயிம் நகர்வாயிலில் அமர்ந்துகொண்டார்.

15 யூதா அவரைக் கண்டபோது, அவர் முகம் மூடியிருந்ததால் அவர் ஒரு விலைமாது என்று நினைத்தார்.

16 அவர் திரும்பிப் பாதையோரம் அவரிடம் சென்று, அவர் தம் மருமகளென்று அறியாமல் தம்முடன் உடலுறவு கொள்ளுமாறு அழைத்தார். அதற்கு அவர், என்னோடு உடலுறவு கொள்வதற்கு என்ன தருவீர்? என்று கேட்டார்.

17 அவர், என் மந்தையிலிருந்து உனக்கு ஒரு வெள்ளாட்டுக் கிடாய் அனுப்புகிறேன் என்றார். அதற்கு அவர், நீர் அதை அனுப்புமட்டும் எனக்கு ஓர் அடைமானம் தருவீரா? என்று கேட்டார்.

18 அடைமானமாக உனக்கு நான் என்ன தர வேண்டும்? என்று அவர் கேட்க, அவர் உம்முடைய முத்திரை மோதிரத்தையும் இடைவாரையும் கைக்கோலையும் தரவேண்டும் என்றார். அவருக்கு அவற்றைக் கொடுத்த பின் அவருடன் உடலுறவு கொண்டார். அவரும் கருவுற்றார்.

19 பின்பு, அவர் எழுந்துபோய், தம் முக்காட்டை எடுத்துவிட்டு விதவைக்குரிய ஆடைகளை அணிந்துகொண்டார்.

20 அவரிடம் தாம் கொடுத்திருந்த அடைமானத்தைத் திரும்பப் பெறுமாறு, யூதா தம் அதுல்லாமிய நண்பன் மூலம் ஒரு வெள்ளாட்டுக் கிடாயை அனுப்பினார். அவனோ அவரைக் காணவில்லை.

21 அங்கிருந்த ஆள்களை நோக்கி, ஏனயிம் அருகே வழியில் இருந்த விலைமாது எங்கே? என்று கேட்க, அவர்கள், இங்கே விலைமாது எவளுமில்லை என்றனர்.

22 அவன் யூதாவிடம் திரும்பி வந்து, நான் அவளைக் காணவில்லை. மேலும் அங்கிருந்த ஆள்கள், இங்கு விலைமாது எவளுமில்லை என்றனர் என்று சொன்னான்.

23 யூதா, அவளே வைத்துக்கொள்ளட்டும்; இல்லையேல் நம்மைப் பார்த்துப் பிறர் சிரிப்பர். நானும் இந்த ஆட்டுக்கிடாயை அவளுக்கு அனுப்பி வைத்தேன். உன்னாலும், அவளைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றார்.

24 மூன்று மாதம் சென்றபின்னர், உம் மருமகளாகிய தாமார் வேசித்தனம் பண்ணினாள். வேசித்தனத்தினால் கருவுற்றிருக்கிறாள் என்று யூதாவுக்கு அறிவிக்கப்பட்டது. அப்பொழுது அவர், அவளை இழுத்துக் கொண்டு வாருங்கள்; அவள் எரிக்கப்பட வேண்டும் என்றார்.

25 அவ்வாறே அவரை இழுத்துக்கொண்டு வருகையில், அவர் தம் மானமாருக்கு, இந்தப் பொருள்கள் எவனுடையவையோ அவனாலேயே நான் கருவுற்றிருக்கிறேன். இந்த முத்திரை மோதிரமும் இடைவாரும் கைக்கோலும் யாருடையவை என்று பாரும் என்று சொல்லியனுப்பினர்.

# BIBLE




26 யூதா அவற்றைப் பார்த்தறிந்து, அவள் என்னைக் காட்டிலும் நேர்மையானவள். அவளை நான் என் மகன் சேலாவுக்கு மணமுடிக்காமல் போனேனே! என்றார். ஆயினும், அதற்குப்பின் அவர் அவரோடு உடலுறவு கொள்ளவில்லை.

27 தாமாருக்குப் பேறுகாலம் வந்தபோது, அவர் வயிற்றில் இரட்டைப் பிள்ளைகள் இருந்தன.

28 அவர் பிள்ளை பெறுகிற வேளையில் ஒரு பிள்ளை கையை வெளியே நீட்டியது. மருத்துவப்பெண் அதன் மணிக்கட்டில் கருஞ்சிவப்பு நூலைக் கட்டி இதுவே முதலில் வந்தது என்றாள்.

29 ஆனால், அது தன் கையைத் திரும்ப உள்ளே இழுத்துக்கொண்டபின், மற்ற பிள்ளை வெளிப்பட்டது. அப்பொழுது அவள் நீ கருப்பையைக் கிழித்துக் கொண்டு வந்தவன் அல்லவா! என்று சொன்னாள். எனவே அவனுக்குப் பெரேட்சு மீ என்று பெயரிடப்பட்டது.

30 பின் கருஞ்சிவப்பு நூல் கையில் கட்டப்பெற்ற அவன் சகோதரன் வெளிப்பட அவனுக்கு செராகு மீ என்று பெயரிடப்பட்டது.

## தொடக்கநூல் அதிகாரம் 39 திருவிவிலியம்

### போத்திபாரின் வீட்டில் யோசேப்பு

1 யோசேப்பு எகிப்து நாட்டிற்கு கொண்டு போகப்பட்டபோது, பார்வோனின் மெய்க்காப்பாளர் தலைவனும் படைத்தலைவனுமான போத்திபார் என்ற எகிப்தியன் அவரை, அவ்விடத்திற்குக் கொண்டுவந்த இஸ்மயேலரிடமிருந்து விலைக்கு வாங்கினான்.

2 ஆண்டவர் யோசேப்புடன் இருந்தார். எனவே, அவர் சிறப்புற்றவராகத் தம் எகிப்தியத் தலைவனின் இல்லத்தில் வாழ்ந்து வந்தார்.

3 ஆண்டவர் அவரோடு இருந்ததையும் அவர் தொட்ட காரியமனைத்தையும் ஆண்டவர் துலங்கச் செய்ததையும் அவர் தலைவன் கண்டான்.


4 எனவே, அவனுடைய தயை யோசேப்புக்குக் கிடைத்தது. அவன் அவரைத் தன் சிறப்புப் பணியாளராகவும் வீட்டின் மேலாளராகவும் நியமித்து, தனக்கிருந்த அனைத்தையும் அவர் பொறுப்பில் ஒப்படைத்தான்.

5 இவ்வாறு, தன் வீட்டையும் தனக்கிருந்த அனைத்தையும் அவர் பொறுப்பில் விட்டதிலிருந்து, எகிப்தியனின் வீட்டுக்கு யோசேப்பின் பொருட்டு ஆண்டவர் ஆசி வழங்கினார். வீட்டிலும் வயல்வெளியிலும் அவனுக்கிருந்த அனைத்தின்மீதும் ஆண்டவர் ஆசி பொழிந்தார்.

6 இவ்வாறு, யோசேப்பின் பொறுப்பில் தனக்கிருந்த அனைத்தையும் ஒப்படைத்த பின், தான் உண்ணும் உணவைத் தவிர வேறெதைப் பற்றியும் அவன் விசாரிக்கவில்லை. யோசேப்பு நல்ல உடற்கட்டும் அழகிய தோற்றமும் கொண்டிருந்தார்.

7 சில நாள்கள் சென்றபின், யோசேப்பின் மீது கண்வைத்திருந்த அந்தத் தலைவனின் மனைவி அவரிடம், என்னோடு படு என்றாள்.

# BIBLE




8 அவர் அதற்கு இணங்க மறுத்து, தம் தலைவரின் மனைவியை நோக்கி, என் தலைவர் எல்லாவற்றையும் என் பொறுப்பில் ஒப்படைத்து விட்டார். வீட்டிலுள்ள எதைப்பற்றியும் அவர் விசாரிப்பதுகூட இல்லை.

9 இந்த வீட்டில் என்னைவிட அதிகாரம் பெற்றவர் ஒருவருமில்லை. நீங்கள் அவருடைய மனைவியாயிருப்பதால், உங்களைத் தவிர வேறெதையும் அவர் என்னிடம் ஒப்படைக்காமல் இருக்கவில்லை. இந்த மாபெரும் தீச்செயலைச் செய்து, கடவுளுக்கு எதிராகப் பாவம் செய்யலாமா? என்றார்.

10 அவள் நாள்தோறும் வற்புறுத்தியபோதிலும், யோசேப்பு அவளோடு படுக்கவோ இருக்கவோ இணங்கவில்லை.

11 இவ்வாறிருக்க, ஒருநாள் யோசேப்பு தம் வேலையை முன்னிட்டு வீட்டுக்குள் சென்றார். உள்ளே வீட்டைச் சார்ந்தவர் வேறு எவரும் இல்லை.

12 அவள் அவரது மேலாடையைப் பற்றி இழுத்து, என்னோடு படு என்றாள். உடனே அவர் அவள் கையில் தம் மேலாடையை விட்டுவிட்டு வெளியே தப்பியோடினார்.

13 அவர் தம் மேலாடையை அவள் கையில் விட்டுவிட்டு வெளியே ஓடியதைக் கண்டு,

14 அவள் தன் வீட்டு ஆள்களைக் கூப்பிட்டு; என் கணவர் நம்மை அவமானப்படுத்துவதற்காகவா இந்த எபிரேயனை வீட்டிற்குக் கொண்டுவந்தார்? இதோ இவன் என்னோடு படுப்பதற்காக என்னிடம் வந்தான். உடனே நான் பெரும் கூச்சலிட்டுக் கத்தினேன்.

15 ஆனால், நான் கூச்சலிட்டதைக் கண்டு அவன் தன் மேலாடையை என்னருகே போட்டுவிட்டு வெளியே ஓடிப்போய் விட்டான் என்றாள்.

16 மேலும், அவள் அவருடைய மேலாடையைத் தன் கணவன் வீட்டுக்குத் திரும்பி வரும்வரை வைத்திருந்துஅவனிடம்,

17 நீர் நம்மிடம் அழைத்து வந்துள்ள எபிரேய அடிமை என்னோடு சரசம் பண்ணும்படி என்னிடம் வந்தான்.

18 அப்போது நான் கூச்சலிட்டுக் கத்தியதும், அவன் தன் மேலாடையை என்னருகே போட்டுவிட்டு வெளியே ஓடிப்போய்விட்டான் என்று கதை கட்டினாள்.

19 உம் அடிமை எனக்கு இப்படிச் செய்துவிட்டான் என்று தன் மனைவி சொல்லக் கேட்ட அவர் தலைவன், கடுஞ்சினம் கொண்டான்.


20 யோசேப்பின் தலைவன், அரசக் கைதிகள் காவலில் வைக்கப்பட்டிருந்த அதே சிறைச்சாலைக்கு அவரை இழுத்துச் சென்று அடைத்து வைத்தான்.

21 ஆண்டவர் யோசேப்புடன் இருந்து, அவர்மீது பேரன்பு காட்டி, சிறை மேலாளன் பார்வையில் அவருக்குத் தயை கிடைக்கும்படி செய்தார்.

22 எனவே, சிறைமேலாளன் சிறையிலிருந்த கைதிகள் அனைவரையும், அங்குச் செய்யப்பட்ட வேலைகள் அனைத்தையும், யோசேப்பின் பொறுப்பில் ஒப்படைத்தான்.

23 அவர் பொறுப்பில் விடப்பட்ட எதைப்பற்றியும் சிறைமேலாளன் விசாரிக்கவில்லை. ஏனெனில், ஆண்டவர் யோசேப்புடன் இருந்தார். அவர் செய்த யாவற்றிலும் வெற்றி அளித்தார்.

# BIBLE



## தொடக்கநூல் அதிகாரம் 40 திருவிவிலியம்

### கைதிகளின் கனவுகளும் யோசேப்பின் விளக்கங்களும்

1 இவை நிகழ்ந்தபின், எகிப்து மன்னனுக்கு மது பரிமாறுவோனும், அப்பம் தயாரிப்போனும் தங்கள் தலைவனாகிய எகிப்திய மன்னனுக்கு எதிராகக் குற்றம் செய்தனர்.

2 பார்வோன் தன் மது பரிமாறுவோரின் தலைவனும் அப்பம் தயாரிப்போரின் தலைவனும் ஆகிய இரு அதிகாரிகள் மீதும் கடும் கோபம் கொண்டு,

3 காவலர் தலைவன் வீட்டிலிருந்த சிறைச்சாலைகளில் அவர்களை அடைத்து வைத்தான். யோசேப்பு அடைபட்டிருந்த இடமும் அதுவே.

4 காவலர் தலைவனோ, அவர்களை யோசேப்புடன் சிறையிருக்குமாறு குறித்தான். யோசேப்பும் அவர்களைக் கண்காணித்து வந்தார். அவர்கள் பல நாள்கள் சிறையில் இருந்தனர்.

5 எகிப்திய மன்னனால் சிறைப்பட்டிருந்த மது பரிமாறுவோன், அப்பம் தயாரிப்போன் இருவரும் ஒரே இரவில் கனவு கண்டனர். ஒவ்வொரு கனவும் வெவ்வேறு பொருள் கொண்டிருந்தது.

6 காலையில் யோசேப்பு அவர்களிடம் வந்தபோது அவர்கள் கவலையாய் இருக்கக் கண்டார்.

7 தம்முடன் தம் தலைவன் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த பார்வோனின் அதிகாரிகளை நோக்கி, அவர், இன்று உங்கள் முகம் இவ்வளவு வாடியிருப்பதேன்? என்று வினவினார்.

8 அவர்கள், நாங்கள் இருவரும் கனவு கண்டோம்; அதை எங்களுக்கு விளக்கிச் சொல்வார் யாருமில்லை என்று பதில் கூறினர். யோசேப்பு அவர்களை நோக்கி, கனவுக்குப் பொருள் சொல்வது கடவுளுக்கு உரியதல்லவா? என்னிடம் விவரமாகச் சொல்லுங்கள் என்றார்.

9 அப்போது மதுபரிமாறுவோர் தலைவன் தன் கனவைப் பற்றிச் சொல்லத் தொடங்கினான்; என் கனவில் ஒரு திராட்சைக் கொடி எனக்கு முன் தோன்றியது.

10 அந்தத் திராட்சைக் கொடியில் மூன்று கிளைகள் இருந்தன. அவை அரும்பிப் பூத்து, கொத்துக் கொத்தாய்ப் பழுக்கக் கண்டேன்.

11 கையில் பார்வோனின் கிண்ணம் இருந்தது. நான் பழங்களைப் பறித்து, பார்வோனின் கிண்ணத்தில் பிழிந்து, அந்தக் கிண்ணத்தைப் பார்வோனின் கையில் கொடுத்தேன் என்றான்.

12 யோசேப்பு அவனை நோக்கி, கனவின் பொருள் இதுவே: மூன்று கிளைகளும் மூன்று நாள்களைக் குறிக்கும்.

13 இன்னும் மூன்று நாள்களில் பார்வோன் உன்னைத் தலைநிமிரச் செய்து உன்னை மீண்டும் முன்னைய பதவியில் அமர்த்துவான். முன்பு நீ பார்வோனின் மதுபரிமாறுவோனாய் இருந்த காலத்தில் செய்ததுபோல அவன் கிண்ணத்தை அவன் கையில் கொடுப்பாய்.

14 உனக்கு வாழ்வு நலமாய் அமைந்தபின், என்னை மறவாமல் எனக்குத் தயைகாட்ட வேண்டுகிறேன். பார்வோனிடம் சொல்லி என்னை இச்சிறையிலிருந்து விடுவி.

15 ஏனெனில், நான் எபிரேயரின் நாட்டிலிருந்து கடத்திக்கொண்டு வரப்பட்டேன்.

# BIBLE




என்னைக் காவற்கிடங்கில் தள்ளிவிடுமளவிற்கு நான் யாதொன்றும் செய்யவில்லை என்றார்.

16 யோசேப்பு இவ்வாறு தகுந்த விளக்கம் அளித்ததைக் கண்டு, அப்பம் தயாரிப்போரின் தலைவன் அவரிடம் நானும் ஒரு கனவு கண்டேன். இதோ மூன்று அப்பக் கூடைகள் என் தலையில் இருந்தன.

17 மேற்கூடையில் பார்வோனுக்காகச் சுட்ட பலவகை அப்பங்கள் இருந்தன. பறவைகள் வந்து என் தலை மேலிருந்த கூடையிலிருந்து அவற்றைத் தின்றுவிட்டன என்றான்.

18 அதற்கு யோசேப்பு, கனவின் பொருள் இதுவே: மூன்று கூடைகளும் மூன்று நாள்களைக் குறிக்கும்.

19 இன்னும் மூன்று நாள்களில் பார்வோன் உனது தலையை வெட்டி உன்னைக் கழுமரத்தில் ஏற்றுவான். பறவைகள் வந்து உன் சதையைத் தின்னும் என்றார்.

20 மூன்றாம் நாள், பார்வோனின் பிறந்த நாள் விழா. அன்று தன் அலுவலர் அனைவருக்கும் அவன் விருந்து அளித்தான். அந்த அலுவலர் முன்னிலையில் மது பரிமாறுவோரின் தலைவன், அப்பம் தயாரிப்போரின் தலைவன் ஆகிய இருவரின் தலைகளையும் நிமிர்த்தினான்.

21 மது பரிமாறுவோரின் தலைவனை முன்னைய பதவிக்கு உயர்த்த, முன்புபோல் அவன் பார்வோனின் கையில் கிண்ணத்தைக் கொடுக்கலானான்.

22 ஆனால், அப்பம் தயாரிப்போரின் தலைவனைப் பார்வோன் கழுமரத்தில் ஏற்றினான். யோசேப்பு அவர்களுக்கு விளக்கிச் சொன்னபடியே இவ்வாறு நடந்தது.

23 ஆனால், மதுபரிமாறுவோரின் தலைவன் யோசேப்பைப் பற்றிய நினைவேயில்லாமல் அவரை மறந்து விட்டான்.

தொடரும்.....











சமூக சேவகர்
லார்ட்ஸ்
டாக்டர் மபாலராஜ்
தலைவர் & நிறுவனர்

உ.த.மு.க
U.T.M.K

உலக தமிழர்கள் முன்னேற்ற கழகம்

100% ஊழலற்ற மக்களுக்கான சேவை அரசியல் WWW.LORDSCLUBS.COM






وَلَا خَوْفٌ الزَّكٰوةَ لَهُمْ اَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ اِنَّ الَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ وَاَقَامُوا الصَّلٰوةَ وَاٰتَوُا 2:277
عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

2:277. யார் ஈமான் கொண்டு, நற் கருமங்களைச் செய்து, தொழுகையை நியமமாகக் கடைப் பிடித்து, ஜகாத்தும் கொடுத்து வருகிறார்களோ, நிச்சயமாக அவர்களுக்கு அவர்களுடைய இறைவனிடத்தில் நற்கூலி இருக்கிறது; அவர்களுக்கு அச்சமுமில்லை அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்.

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اتَّقُوا اللّٰهَ وَذَرُوْا مَا بَقِىَ مِنَ الرِّبٰوا اِنْ كُنْتُمْ مُّؤْمِنِيْنَ 2:278

2:278. ஈமான் கொண்டவர்களே! நீங்கள் உண்மையாக முஃமின்களாக இருந்தால், அல்லாஹ்வுக்கு அஞ்சியடங்கி, எஞ்சியுள்ள வட்டியை வாங்காது விட்டு விடுங்கள்.

مُوْنَ لَا تَظْلِمُوْنَ وَلَا تُظْلَمُ وَاِنْ تُبْتُمْ فَلَكُمْ رُءُوْسُ اَمْوَالِكُمْ فَاِنْ لَّمْ تَفْعَلُوْا فَاْذَنُوْا بِحَرْبٍ مِّنَ اللّٰهِ وَرَسُوْلِهٖ 2:279


2:279. இவ்வாறு நீங்கள் செய்யவில்லையென்றால் அல்லாஹ்விடமிருந்தும், அவனுடைய தூதரிடமிருந்தும் போர் அறிவிக்கப்பட்டு விட்டது (என்பதை அறிந்து கொள்ளுங்கள்)- நீங்கள் தவ்பா செய்து (இப்பாவத்திலிருந்தும் ) மீண்டுவிட்டால், உங்கள் பொருள்களின் அசல் - முதல் - உங்களுக்குண்டு; (கடன்பட்டோருக்கு) நீங்கள் அநியாயம் செய்யாதீர்கள், - நீங்களும் அநியாயம் செய்யப்பட மாட்டீர்கள்.

اِنْ كُنْتُمْ تَعْلَمُوْنَ وَاَنْ تَصَدَّقُوْا خَيْرٌ لَّكُمْ وَاِنْ كَانَ ذُوْ عُسْرَةٍ فَنَظِرَةٌ اِلٰى مَيْسَرَةٍ 2:280

2:280. அன்றியும், கடன்பட்டவர் (அதனைத் தீர்க்க இயலாது) கஷ்டத்தில் இருப்பின் (அவருக்கு) வசதியான நிலை வரும்வரைக் காத்திருங்கள்; இன்னும், (கடனைத் தீர்க்க இயலாதவருக்கு அதை) தர்மமாக விட்டுவிடுவீர்களானால் - (அதன் நன்மைகள் பற்றி) நீங்கள் அறிவீர்களானால் - (அதுவே) உங்களுக்குப் பெரும் நன்மையாகும்.

_ ثُمَّ تُوَفّٰى كُلُّ نَفْسٍ مَّا كَسَبَتْ وَهُمْ لَا يُظْلَمُوْنَ وَاتَّقُوْا يَوْمًا تُرْجَعُوْنَ فِيْهِ اِلَى اللّٰهِ 2:281

2:281. தவிர, அந்த நாளைப் பற்றி அஞ்சிக் கொள்ளுங்கள்; அன்று நீங்களனைவரும் அல்லாஹ்விடம் மீட்டப்படுவீர்கள்; பின்னர் ஒவ்வோர் ஆத்மாவுக்கும் அது சம்பாதித்ததற்குரிய



(கூலி) பூரணமாகக் கொடுக்கப்படும்; மேலும் (கூலி) வழங்கப்படுவதில் அவை அநியாயம் செய்யப்படமாட்டா.

وَلَا ⎕وَلْيَكْتُبْ بَّيْنَكُمْ كَاتِبٌ بِالْعَدْلِ ۚ يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْٓا اِذَا تَدَايَنْتُمْ بِدَيْنٍ اِلٰٓى اَجَلٍ مُّسَمًّى فَاكْتُبُوْهُ 2:282
ۚ فَلْيَكْتُبْ وَلْيُمْلِلِ الَّذِيْ عَلَيْهِ الْحَقُّ وَلْيَتَّقِ اللّٰهَ رَبَّهٗ وَلَا يَبْخَسْ مِنْهُ شَيْـًٔا يَأْبَ كَاتِبٌ اَنْ يَّكْتُبَ كَمَا عَلَّمَهُ اللّٰهُ
وَاسْتَشْهِدُوْا الْحَقُّ سَفِيْهًا اَوْ ضَعِيْفًا اَوْ لَا يَسْتَطِيْعُ اَنْ يُّمِلَّ هُوَ فَلْيُمْلِلْ وَلِيُّهٗ بِالْعَدْلِ فَاِنْ كَانَ الَّذِيْ عَلَيْهِ ا
اَنْ تَضِلَّ اِحْدٰىهُمَا فَاِنْ لَّمْ يَكُوْنَا رَجُلَيْنِ فَرَجُلٌ وَّامْرَاَتٰنِ مِمَّنْ تَرْضَوْنَ مِنَ الشُّهَدَاۤءِ شَهِيْدَيْنِ مِنْ رِّجَالِكُمْ
ۚ وَلَا تَسْـَٔمُوْٓا اَنْ تَكْتُبُوْهُ صَغِيْرًا اَوْ كَبِيْرًا اِلٰٓى وَ لَا يَأْبَ الشُّهَدَاۤءُ اِذَا مَا دُعُوْا فَتُذَكِّرَ اِحْدٰىهُمَا الْاُخْرٰى
وَاَدْنٰٓى اَلَّا تَرْتَابُوْٓا اِلَّآ اَنْ تَكُوْنَ تِجَارَةً حَاضِرَةً تُدِيْرُوْنَهَا بَيْنَكُمْ فَلَيْسَ ذٰ لِكُمْ اَقْسَطُ عِنْدَ اللّٰهِ وَاَقْوَمُ لِلشَّهَادَةِ اَجَلِهٖ
تُهٗ ۗ وَاِنْ تَفْعَلُوْا فَاِ ۚ وَلَا يُضَاۤرَّ كَاتِبٌ وَّلَا شَهِيْدٌ ۚ وَاَشْهِدُوْٓا اِذَا تَبَايَعْتُمْ عَلَيْكُمْ جُنَاحٌ اَلَّا تَكْتُبُوْهَا
ۗ وَاللّٰهُ بِكُلِّ شَيْءٍ عَلِيْمٌ ۗ وَيُعَلِّمُكُمُ اللّٰهُ فُسُوْقٌ ۢ بِكُمْ ۗ وَاتَّقُوا اللّٰهَ

2:282. ஈமான் கொண்டோரே! ஒரு குறித்த தவணையின் மீது உங்களுக்குள் கடன் கொடுக்கல் வாங்கல் செய்து கொண்டால், அதை எழுதி வைத்துக் கொள்ளுங்கள்; எழுதுபவன் உங்களிடையே நீதியுடன் எழுதட்டும்; எழுதுபவன் எழுதுவதற்கு மறுக்கக்கூடாது; (நீதமாக எழுதுமாறு) அல்லாஹ் அவனுக்குக் கற்றுக் கொடுத்தபடி அவன் எழுதட்டும். இன்னும் யார் மீது கடன் (திருப்பிக் கொடுக்க வேண்டிய) பொறுப்பு இருக்கிறதோ அவனே (பத்திரத்தின்) வாசகத்தைச் சொல்லட்டும்; அவன் தன் ரப்பான (அல்லாஹ்வை) அஞ்சிக் கொள்ளட்டும்; மேலும், அ(வன் வாங்கிய)தில் எதையும் குறைத்து விடக் கூடாது; இன்னும், யார் மீது கடன் (திருப்பிக் கொடுக்க வேண்டிய) பொறுப்பு இருக்கிறதோ அவன் அறிவு குறைந்தவனாகவோ, அல்லது (பால்யம், முதுமை போன்ற காரணங்களால்) பலஹீனனாகவோ, அல்லது வாசகத்தைக் கூற இயலாதவனாகவோ இருப்பின் அவனுடைய வலீ(நிர்வாகி) நீதமாக வாசகங்களைச் சொல்லட்டும்; தவிர, (நீங்கள் சாட்சியாக ஏற்கக் கூடிய) உங்கள் ஆண்களில் இருவரை சாட்சியாக்கிக் கொள்ளுங்கள்; ஆண்கள் இருவர் கிடைக்காவிட்டால், சாட்சியங்களில் நீங்கள் பொருந்தக்கூடியவர்களிலிருந்து ஆடவர் ஒருவரையும், பெண்கள் இருவரையும் சாட்சிகளாக எடுத்துக் கொள்ளுங்கள்;



(பெண்கள் இருவர்) ஏனென்றால் அவ்விருவரில் ஒருத்தி தவறினால், இருவரில் மற்றவள் நினைவூட்டும் பொருட்டேயாகும்; அன்றியும், (சாட்சியம் கூற) சாட்சிகள் அழைக்கப்பட்டால் அவர்கள் மறுக்கலாகாது; தவிர, (கொடுக்கல் வாங்கல்) சிறிதோ, பெரிதோ அதை, அதன் கால வரையறையுடன் எழுதுவதில் அலட்சியமாக இராதீர்கள்; இதுவே அல்லாஹ்வின் முன்னிலையில் மிகவும் நீதமானதாகவும், சாட்சியத்திற்கு உறுதி உண்டாக்குவதாகவும், இன்னும் இது உங்களுக்கு சந்தேகங்கள் ஏற்படாமல் இருக்க சிறந்த வழியாகவும் இருக்கும்; எனினும் உங்களிடையே சுற்றி வரும் ரொக்க வியாபாரமாக இருப்பின், அதை எழுதிக் கொள்ளாவிட்டலும் உங்கள் மீது குற்றமில்லை; ஆனால் (அவ்வாறு ) நீங்கள் வியாபாரம் செய்யும்போதும் சாட்சிகளை வைத்துக் கொள்ளுங்கள் - அன்றியும் எழுதுபவனையோ, சாட்சியையோ (உங்களுக்கு சாதகமாக இருப்பதற்காகவோ, வேறு காரணத்திற்காகவோ) துன்புறுத்தப்படக் கூடாது; நீங்கள் அப்படிச் செய்வீர்களாயின் அது உங்கள் மீது நிச்சயமாகப் பாவமாகும்; அல்லாஹ்வுக்கு அஞ்சிக் கொள்ளுங்கள்; ஏனெனில் அல்லாஹ் தான் உங்களுக்கு (நேரிய இவ்விதிமுறைகளைக்) கற்றுக் கொடுக்கின்றான், தவிர,அல்லாஹ்வே எல்லாப் பொருட்களையும் பற்றி நன்கறிபவன்.

ۖ فَإِنْ أَمِنَ بَعْضُكُم بَعْضًا فَلْيُؤَدِّ الَّذِي اؤْتُمِنَ وَإِن كُنتُمْ عَلَىٰ سَفَرٍ وَلَمْ تَجِدُوا كَاتِبًا فَرِهَٰنٌ مَّقْبُوضَةٌ 2:283
اللَّهَ رَبَّهُ وَلْيَتَّقِ أَمَانَتَهُ الشَّهَادَةَ وَلَا تَكْتُمُوا فَإِنَّهُ آثِمٌ قَلْبُهُ وَمَن يَكْتُمْهَا ۗ عَلِيمٌ وَاللَّهُ بِمَا تَعْمَلُونَ

2:283. இன்னும், நீங்கள் பிரயாணத்திலிருந்து, (அச்சமயம்) எழுதுபவனை நீங்கள் பெற்றுக் கொள்ளாவிட்டால், (கடன் பத்திரத்திற்கு பதிலாக ஏதேனும் ஒரு பொருளை கடன் கொடுத்தவன்) அடமானமாகப் பெற்றுக் கொள்ளலாம், உங்களில் ஒருவர் மற்றவரை நம்பி (இவ்வாறு ஒரு



பொருளைக் காப்பாக வைத்தால்,) யாரிடத்தில் அமானிதம் வைக்கப்பட்டதோ அவன் அதனை ஒழுங்காகத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்; அவன் தன் இறைவனாகிய அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளட்டும்; அன்றியும், நீங்கள் சாட்சியத்தை மறைக்க வேண்டாம் - எவன் ஒருவன் அதை மறைக்கின்றானோ நிச்சயமாக அவனுடைய இருதயம் பாவத்திற்குள்ளாகிறது - இன்னும் நீங்கள் செய்வதையெல்லாம் அல்லாஹ் நன்கறிவான்.

2:284 فَيَغْفِرُ لِمَنْ وَاِنْ تُبْدُوْا مَا فِيْٓ اَنْفُسِكُمْ اَوْ تُخْفُوْهُ يُحَاسِبْكُمْ بِهِ اللّٰهُ فِي السَّمٰوٰتِ وَمَا فِي الْاَرْضِ لِلّٰهِ مَا
يَّشَاۤءُ وَيُعَذِّبُ مَنْ يَّشَاۤءُ قَدِيْرٌ عَلٰى كُلِّ شَيْءٍ وَاللّٰهُ

2:284. வானங்களிலும், பூமியிலும் உள்ளவை (அனைத்தும்) அல்லாஹ்வுக்கே உரியன; இன்னும், உங்கள் உள்ளங்களில் இருப்பதை நீங்கள் வெளிப்படுத்தினாலும், அல்லது அதை நீங்கள் மறைத்தாலும், அல்லாஹ் அதைப் பற்றி உங்களைக் கணக்கு கேட்பான் - இன்னும், தான் நாடியவரை மன்னிப்பான்; தான் நாடியவரை வேதனையும் செய்வான் - அல்லாஹ் அனைத்துப் பொருட்கள் மீதும் சக்தியுடையவன்.

2:285 لَا نُفَرِّقُ بَيْنَ كُلٌّ اٰمَنَ بِاللّٰهِ وَمَلٰٓئِكَتِهٖ وَكُتُبِهٖ وَرُسُلِهٖ اٰمَنَ الرَّسُوْلُ بِمَآ اُنْزِلَ اِلَيْهِ مِنْ رَّبِّهٖ وَالْمُؤْمِنُوْنَ
غُفْرَانَكَ رَبَّنَا وَاِلَيْكَ الْمَصِيْرُ سَمِعْنَا وَاَطَعْنَا وَقَالُوْا اَحَدٍ مِّنْ رُّسُلِهٖ

2:285. (இறை) தூதர், தம் இறைவனிடமிருந்து தமக்கு அருளப்பெற்றதை நம்புகிறார்; (அவ்வாறே) மு..மின்களும் (நம்புகின்றனர்; இவர்கள்) யாவரும் அல்லாஹ்வையும், அவனுடைய மலக்குகளையும், அவனுடைய வேதங்களையும், அவனுடைய தூதர்களையும் நம்புகிறார்கள்: "நாம் இறை தூதர்களில் எவர் ஒருவரையும் பிரித்து வேற்றுமை பாராட்டுவதில்லை; (என்றும்) இன்னும் நாங்கள் செவிமடுத்தோம்; (உன் கட்டளைகளுக்கு) நாங்கள் வழிப்பட்டோம்; எங்கள் இறைவனே! உன்னிடமே மன்னிப்புக் கோருகிறோம்; (நாங்கள்) மீளுவதும் உன்னிடமேதான்" என்று கூறுகிறார்கள்.




رَبَّنَا لَا تُؤَاخِذْنَآ إِنْ نَّسِينَآ أَوْ أَخْطَأْنَا لَهَا مَا كَسَبَتْ وَعَلَيْهَا مَا اكْتَسَبَتْ لَا يُكَلِّفُ اللّٰهُ نَفْسًا إِلَّا وُسْعَهَا 2:286
وَاعْفُ رَبَّنَا وَلَا تُحَمِّلْنَا مَا لَا طَاقَةَ لَنَا بِهٖ كَمَا حَمَلْتَهٗ عَلَى الَّذِيْنَ مِنْ قَبْلِنَا رَبَّنَا وَلَا تَحْمِلْ عَلَيْنَآ إِصْرًا
أَنْتَ مَوْلٰنَا فَانْصُرْنَا عَلَى الْقَوْمِ الْكٰفِرِيْنَ وَارْحَمْنَا وَاغْفِرْ لَنَا عَنَّا

2:286. அல்லாஹ் எந்த ஓர் ஆத்மாவுக்கும் அது தாங்கிக் கொள்ள முடியாத அளவு கஷ்டத்தை கொடுப்பதில்லை; அது சம்பாதித்ததின் நன்மை அதற்கே; அது சம்பாதித்த தீமையும் அதற்கே! (மு..மின்களே! பிரார்த்தனை செய்யுங்கள்:) "எங்கள் இறைவா! நாங்கள் மறந்து போயிருப்பினும், அல்லது நாங்கள் தவறு செய்திருப்பினும் எங்களைக் குற்றம் பிடிக்காதிருப்பாயாக! எங்கள் இறைவா! எங்களுக்கு முன் சென்றோர் மீது சுமத்திய சுமையை போன்று எங்கள் மீது சுமத்தாதிருப்பாயாக! எங்கள் இறைவா! எங்கள் சக்திக்கப்பாற்பட்ட (எங்களால் தாங்க முடியாத) சுமையை எங்கள் மீது சுமத்தாதிருப்பாயாக! எங்கள் பாவங்களை நீக்கிப் பொறுத்தருள்வாயாக! எங்களை மன்னித்தருள் செய்வாயாக! எங்கள் மீது கருணை புரிவாயாக! நீயே எங்கள் பாதுகாவலன்; கா..பிரான கூட்டத்தாரின் மீது (நாங்கள் வெற்றியடைய) எங்களுக்கு உதவி செய்தருள்வாயாக!"

3. ஸூரத்துல்ஆல இம்ரான் (இம்ரானின் சந்ததிகள்) மதனீ, வசனங்கள்: 200

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்(துவங்குகிறேன்)

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

3:1. அலி..ப், லாம், மீம்.

3:2 اللّٰهُ لَآ إِلٰهَ إِلَّا هُوَ الْحَيُّ الْقَيُّوْمُ

3:2. அல்லாஹ் - அவனைத் தவிர (வணக்கத்திற்குரிய) நாயன் வேறில்லை; அவன் நித்திய ஜீவன்; என்றும் நிலைத்திருப்பவன்.

3:3 نَزَّلَ عَلَيْكَ الْكِتٰبَ بِالْحَقِّ مُصَدِّقًا لِّمَا بَيْنَ يَدَيْهِ وَأَنْزَلَ التَّوْرٰىةَ وَالْإِنْجِيْلَ

3:3. (நபியே! முற்றிலும்) உண்மையைக் கொண்டுள்ள இந்த வேதத்தைப் (படிப்படியாக) அவன் தான் உம் மீது இறக்கி

# KURAN



வைத்தான்; இது-இதற்கு முன்னாலுள்ள (வேதங்களை) உறுதிப்படுத்தும் தவ்ராத்தையும் இன்ஜீலையும் அவனே இறக்கி வைத்தான்.

3:4 مِنْ قَبْلُ هُدًى لِّلنَّاسِ وَاَنْزَلَ الْفُرْقَانَ ۗ اِنَّ الَّذِيْنَ كَفَرُوْا بِاٰيٰتِ اللّٰهِ لَهُمْ عَذَابٌ شَدِيْدٌ ؕ وَاللّٰهُ عَزِيْزٌ ذُو انْتِقَامٍ

3:4. இதற்கு முன்னால் மனிதர்களுக்கு நேர்வழி காட்டுவதற்காக (நன்மை, தீமை இவற்றைப் பிரித்தறிவிக்கும்) ∴புர்க்கா(ன் என்னும் குர்ஆ)னையும் இறக்கி வைத்தான். ஆகவே, எவர் அல்லாஹ்வின் வசனங்களை நிராகரிக்கின்றார்களோ; அவர்களுக்கு நிச்சயமாகக் கடும் தண்டனையுண்டு; அல்லாஹ் யாவரையும் மிகைத்தோனாகவும், (தீயோரைப்) பழி வாங்குபவனாகவும் இருக்கின்றான்.

தொடரும்.....




# ANNAI VEILANKANNI'S
## GROUP OF EDUCATIONAL INSTITUTIONS

**ADMISSION NOTICE 2022 - 2023**

Wi-Fi Campus

### ARTS & SCIENCE COLLEGE FOR WOMEN
Affiliated to the University of Madras | Accredited by NAAC
#81, VGP Salai, West Saidapet, Chennai-600 015

UG Courses

Shift I
- B.Com
  - General
  - Accounting & Finance
  - Computer Applications
  - Info. System Management
  - Corporate Secretaryship
- B.A. - English Literature
- B.B.A. • B.C.A.
- B.Sc. - Bio-Chemistry - Maths - Comp. Science

Shift II
- B.Com - General • B.C.A.

PG Courses
- M.Com
- MHRM
- M.Sc.
  - Computer Science
  - Bio-Chemistry

### COLLEGE OF ENGINEERING
Approved by AICTE, New Delhi & Affiliated to Anna University, Chennai
#33, Gandhi Road, Near Perungalathur Railway Station
Nedungundram, Chennai-127

**BE**
- CIVIL • MECH. • ECE
- COMPUTER SCIENCE

ANNA UNIVERSITY COUNSELLING CODE: 1133


Other Professional Courses
- B.Pharmacy
- M.Pharmacy
- B.Ed.
- B.Sc. Nursing (4 Year Course)
- Diploma in Nursing (GNM) (3 Year Course)

044-43523712, 92821 44444, 96000 26826
www.annaiveilankannis.com

Dr. S. Devaraj
Chairman

# BHAGAVAD GITA

## PART-18






योऽन्तःसुखोऽन्तरारामस्तथान्तर्ज्योतिरेव यः ।
स योगी ब्रह्मनिर्वाणं ब्रह्मभूतोऽधिगच्छति ॥२४॥


தனக்குள்ளே இன்பமுடையவனாய், உள்ளே மகிழ்ச்சி காண்பவனாய், உள்ளே ஒளி பெற்றவனாகிய யோகி, தானே ப்ரம்மமாய், ப்ரம்மநிர்வாண மடைகிறான். 24

लभन्ते ब्रह्मनिर्वाणमृषयः क्षीणकल्मषाः ।
छिन्नद्वैधा यतात्मानः सर्वभूतहिते रताः ॥ २५॥

* இருமைகளை வெட்டிவிட்டுத் தம்மைத் தாம் கட்டுப்படுத்தி, எல்லா உயிர்களுக்கும் இனியது செய்வதில் மகிழ்ச்சி யெய்தும் ரிஷிகள் பாவங்களொழிந்து ப்ரம்ம நிர்வாணம் அடைகிறார்கள்.

---

* இருமைகள் : நன்மை, தீமை ; குளிர், சூடு ; இன்பம், துன்பம்—என எல்லாப் பொருள்களையும் பற்றி நிற்கும் இரட்டை நிலைகள்.






कामक्रोधवियुक्तानां यतीनां यतचेतसाम् ।
अभितो ब्रह्मनिर्वाणं वर्तते विदितात्मनाम् ॥


விருப்பமும், சினமுந் தவிர்ந்து சித்தத்தைக் கட்டுப்படுத்திய ஆத்மஞானிகளாகிய முனிகளுக்கு ப்ரம்மநிர்வாணம் அருகிலுள்ளது. 26

स्पर्शान्कृत्वा बहिर्बाह्यांश्चक्षुश्चैवान्तरे भ्रुवोः ।
प्राणापानौ समौ कृत्वा नासाभ्यन्तरचारिणौ ॥

புறத் தீண்டுதல்களை அகற்றிப் புருவங்களுக் கிடையே விழிகளை நிறுத்தி மூக்கினுள்ளே இயங் கும் பிராண வாயுவையும் அபான வாயுவையும் ஸமமாகச் செய்துகொண்டு 27

यतेन्द्रियमनोबुद्धिर्मुनिर्मोक्षपरायणः ।
विगतेच्छाभयक्रोधो यः सदा मुक्त एव सः ॥

புலன்களை, மனத்தை, மதியையும் கட்டி
விடுதலையிலக் கெனக் கொண்டு
விருப்பமும் அச்சமும் சினமுந் தவிர்ந்தான்,
முக்தனே யாவான் முனி. 28






भोक्तारं यज्ञतपसां सर्वलोकमहेश्वरम् ।
सुहृदं सर्वभूतानां ज्ञात्वा मां शान्तिमृच्छति ॥


'வேள்வியுந் தவமும் † மிசைவோன் யானே;
உலகுகட் கெல்லாம் ஒருபே ரரசன்;
எல்லா உயிர்கட்கு நண்பன் யான்' என்
றறிவான் அமைதி யறிவான். 29

इति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु ब्रह्मविद्यायां
योगशास्त्रे श्रीकृष्णार्जुनसंवादे
संन्यासयोगो नाम
पञ्चमोऽध्यायः ।

இங்ஙனம் உபநிஷத்தும், பிரம்ம வித்தையும்,
யோக சாஸ்த்ரமும் ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன
ஸம்பாஷணையு மாகிய ஸ்ரீமத் பகவத்
கீதையில் "ஸந்யாஸ யோகம்" என்ற
ஐந்தாம் அத்யாயம் முற்றிற்று.

---

† மிசைவது-உண்பது.




# षष्ठोऽध्यायः

## ஆறும் அத்யாயம்.


அத்யாத்மயோகம்.

श्रीभगवानुवाच—

अनाश्रितः कर्मफलं
कार्यं कर्म करोति यः ।
स संन्यासी च योगी च
न निरग्निर्न चाक्रियः ॥ १ ॥

பகவான் சொல்லுகிறான் :—

செய்கையின் பயனில் சார்பின்றிச் செய்யத் தக்கது செய்வோன் துறவி; அவனே யோகி. தீ வளர்க்காதவனும் கிரியை செய்யாதவனும் அவர் ஆகார். 1







यं संन्यासमिति प्राहु-
र्योगं तं विद्धि पाण्डव ।
न ह्यसंन्यस्तसङ्कल्पो
योगी भवति कश्चन ॥ २ ॥

பாண்டவா, எதனை ஸங்யாஸ மென்கிறார்களோ, அதுவே யோக மென்றறி. தன் கோட்பாடுகளைத் துறக்காத எவனும் யோகி யாக மாட்டான். 2

आरुरुक्षोर्मुनेर्योगं
कर्म कारणमुच्यते ।
योगारूढस्य तस्यैव
शमः कारणमुच्यते ॥ ३ ॥

யோக நிலையில் எற விரும்பும் யோகிக்குத் தொழிலே கருவியாகக் கூறப்படுகிறது. அந் நிலையில் எறியபின் அவனுக்கு சாந்தம் கருவி யாகிறது. 3

# BHAGAVAD GITA






यदा हि नेन्द्रियार्थेषु न कर्मस्वनुषज्जते ।
सर्वसङ्कल्पसंन्यासी योगारूढस्तदोच्यते ॥ ४ ॥

ஒருவன் எல்லாக் கோட்பாடுகளையுந் துறந்து விட்டுப் புலன்களிலேனும் செயல்களிலேனும் பற்றுதலின்றி யிருப்பானாயின், அப்போதவன் 'யோக நிலையில் ஏறியவன்' என்று சொல்லப்படுகிறான். 4


उद्धरेदात्मनात्मानं नात्मानमवसादयेत् ।
आत्मैव ह्यात्मनो बन्धुरात्मैव रिपुरात्मनः ॥ ५ ॥

தன்னைத் தான் உயர்த்திக்கொள்க; தன்னைத் தன்னால் இழிவுறுத்த வேண்டா; தனக்குத் தானே நண்பன்; தனக்குத் தானே பகைவன். 5

बन्धुरात्मात्मनस्तस्य येनात्मैवात्मना जितः ।
अनात्मनस्तु शत्रुत्वे वर्तेतात्मैव शत्रुवत् ॥ ६ ॥

தன்னைத்தான் வென்றவனே தனக்குத் தான் நண்பன்; தன்னைத்தான் வெல்லாதான் தனக்குத் தான் பகைவன் போற் கேடு சூழ்கிறான். 6

தொடரும்.....




# லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல் சர்வதேச தலைவர் லார்ட்ஸ் ம.பால்ராஜ் அவர்களுக்கு மலைக்கோட்டை மாநகரில் டாக்டர் பட்டம் வழங்கி கௌரவப்படுத்திய அமெரிக்கப் பல்கலைகழகம்

எண்ணற்ற தொடர் சமூக சேவையில் வெள்ளி விழா கண்ட

LORDS CLUBS INTERNATIONAL (சர்வதேச மனித கடவுள்கள் சங்கங்கள்)
சர்வதேச தலைவர் மற்றும் சமூக சேவகர் லார்ட்ஸ் ம.பால்ராஜ் அவர்களை குறித்த ஓர் பார்வை :

இவர் இருபத்தி ஐந்து ஆண்டுகாலமாக (கால் நூற்றாண்டு காலம்) தொடர்ந்து ஏழை எளியவர்களுக்கு எண்ணற்ற தொடர் சமூக சேவைகள் செய்து வரும் சமூக சேவகர் ம.பால்ராஜ் அவர்களின் தொடர் சமூக சேவைகள் எண்ணற்றவை,
சமூகசேவகர் ம.பால்ராஜ் வாழ்க்கையில் அன்பையும் நட்பையும் ஒற்றுமையையும் கடைபிடித்தால் வாழ்க்கையில் ஜெயிப்பது எளிது என்பதே இவரது கொள்கையாகும்.

மேலும் உலக மக்களிடம் ஊழலும், பிச்சைக்காரர்களும், வறுமையும் இல்லா புதியதோர் உலகை படைக்க வேண்டும் என்பது இவரது லட்சியமாகும்.

லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேனல், இந்திய அரசின் பதிவுசெய்யப்பட்ட சர்வதேச சமூக சேவை நிறுவனத்தின் நிறுவனரும்,சர்வதேச லார்ட்ஸ் பிரஸ்கிளப்ஸ் களின் சர்வதேச நிருபர்களின் தலைவரும், லார்ட்ஸ் டுடே சர்வதேச மாத இதழின் தலைமை செய்தி ஆசிரியரும் மற்றும் உலக தமிழர்கள் முன்னேற்றக் கழகம் நிறுவனரும் தலைவரும் ஆன சமூக சேவகர் லார்ட்ஸ் ம.பால்ராஜ் அவர்கள் இவரது சமூக சேவைகளில் பல ஆயிரக்கணக்கான மாற்றுத் திறனாளிகளுக்கும், ஏழை-எளியோருக்கும் இலவச கம்யூட்டர் தொழிற்கல்வி, நூற்றுக்கணக்கான புற்றுநோயாளிகளுக்கு மருத்துவ உதவியும், நிதி உதவியும், இரத்ததான உதவியும் செய்து குணமடையச் செய்து அவர்களுக்கு நீண்ட கால ஆயுள் பெற்றுத் தந்துள்ளார்.

இவர் இதுவரையில் இலட்சக்கணக்கான இரத்த தான முகாம்கள் நடத்தியுள்ளார். பல கோடிக்கணக்கான மரம் வளர்ப்புகளும் செய்துள்ளார். பல லட்சக்கணக்கான பசித்தோருக்கு உணவளித்து அன்னதானம் செய்துள்ளார். சாலையோரம் சுற்றித்திரியும் எண்ணற்ற மனநலம் சரியில்லாதவர்களை தேடிச் சென்று மருத்துவமனையில் சேர்த்து குணமடைய செய்துள்ளார்.
சாலையோர பிச்சைக் கேட்பாளர்களை தேடிச் சென்ற உணவளித்து அனாதை இல்லத்தில் சேர்த்து உண்ண உணவும், உடுத்த உடையும், தங்கும் இடமும் மருத்துவமும் கிடைக்கச் செய்துள்ளார்.
நூற்றுக்கணக்கான அனாதைக் குழந்தைகளை அனாதை ஆசிரமங்களில் சேர்த்து உண்ண உணவும், உடுத்த உடையும, தங்கும் இடம், மருத்துவத்துடன் கல்வியும் கிடைக்கச் செய்துள்ளார்.

ஏழை எளியவர்களுக்கும், மாற்றுத் திறனாளிகளுக்கும் வாழ்நாள் பென்ன், கணவனை இழந்த பெண்களுக்கு விதவைகள் வாழ்நாள் பென்ன், முதியோர்களுக்கும் முதியோர் வாழ்நாள் பென்ன் போன்றவற்றை மாநில அரசிடமிருந்து தொடர்ந்து பெற்றுக் கொடுத்து அவர்களின் வாழ்வாதாரத்தைக் காத்துள்ளார்.

ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு தொழிற்கல்வி அளித்து வேலைவாய்ப்புகள் பெற்றுக் கொடுத்துள்ளார்.

எண்ணற்றவர்களுக்கு கண் கண்ணாடி வழங்குதல், கண் அறுவை சிகிழ்ச்சை செய்தல், செயற்கை கை மற்றும் செயற்கை கால்கள் வழங்குதல் பல கோடிக்கணக்கான மரக்கன்றுகள் உறுப்பினர்கள் உதவியுடனும் நட்டுள்ளார்.

மேலும் பொது மக்களிடையே மத ஒற்றுமையையும் மனித நேயத்தையும் வளர்ப்பதற்காக இவரது லார்ட்ஸ் டுடே ஆன்மிகம் மற்றும் சமூக சேவை பத்திரிகையில் தொடர்ந்து பகவத்கீதை, பைபிள், குரான் இம்மூன்றையும் உலக ஊடக வரலாற்றில் எந்த ஊடகங்களும் செய்திடாத இவரது லார்ட்ஸ் டுடே ஊடகத்தில் மட்டும் உலக ஊடக வரலாற்றில் முதல்முறையாக மெகா தொடராக தொடர்ந்து பல மாதங்களாக பிரசுரித்து உலக மக்களிடையே மத ஒற்றுமையையும் மனிதநேயத்தையும் சேவை உணர்வையும் தமிழ் மொழியையும் உலகம் முழுவதும் பரவச் செய்து அனைத்து மதங்களும் தமிழ் மொழியும் உலகெங்கிலும் அழியாமல் வளர்த்து வருகின்றார்.





தமிழை தாய்மொழியாக கொண்ட இவரது பெயரிலேயே கடந்த 25 ஆண்டுகாலமாக மூன்று மதங்களின் சின்னங்களையும் மத ஒற்றுமைக்காக பதித்திருப்பது மிகச் சிறப்பானதாகும்.

மேலும் இவர் இந்தியர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கான வழிமுறைகளை மத்திய-மாநில அரசுகளுக்கும், பொதுமக்களுக்கும் ஊடகங்களின் வாயிலாக எடுத்துச் சொல்வதும் இந்தியர்களின் பொருளாதாரம் அயல்நாடுகளுக்கு செல்லவேண்டாம் என்றும் தொடர்ந்து 25 ஆண்டு காலமாக அகிம்சை வழியில் அறப்போராட்டங்கள் நடத்துவது மற்றும் பல எண்ணற்ற ஊழல், அரசியல், விழிப்புணர்வு வியங்கள் உட்பட மதுவிலக்குப் போராட்டங்கள் நடத்துவது, இந்தியர்களின் பொருளாதாரத்தை முன்னேற்றி உயர்த்த முயற்சிப்பதும், ஊழலை எதிர்த்து போராடுவது, வீர தமிழர்களின் வீர விளையாட்டு ஜல்லிக்கட்டுக்காகப் போராடுவது, பசுமாடுகள் அடிமாடுகளாக்க கூடாது என்று போராடுவது, கரும்பு விவசாயிகளுக்கு அளிக்கவேண்டிய நிலுவைத் தொகையை பெற்றுத்தருவதற்காக விவசாயிகளுக்காகப் போராடுவது, மேலும் இந்தியர்கள் அனைவருக்கும் இலவசக் கல்வி வேண்டியும் அகிம்சை வழியில் அறப்போராட்டம் நடத்திவருவதும் ஏழைகளும், ஏழை குழந்தைகளும் அன்றாடம் அருந்தும் ஆவின் பால் விலை ஏற்றத்தை குறைக்கவேண்டியும் பல்வேறு போராட்டங்களுக்காக நேரடியாக வீதியில் களம் இறங்கி போராடி பல போராட்டங்களில் வெற்றி கண்டுள்ளார் ம.பால்ராஜ்.

25 ஆண்டுகாலமாக அனைத்து சமூக மக்களுக்குமான சமூக சேவை வழியில் நேர்மையுடன் பயணிக்கும் இவரை அனைத்துச் சமூகத்தில் இருந்தும் பல இளைஞர்கள் பின்பற்றி இவரை ரோல் மாடலாகவே கருதி இவர் வழியில் பல ஆண்டு காலமாக இவரைப் பின்பற்றி பின்தொடர்கின்றார்கள்.

நல்லவர்களுக்கு என்றுமே இறைவன் துணையிருப்பார் என்பது போல இவரது சமூக சேவையைப் பாராட்டி இவருக்கு சிறந்த



சாதைனையாளர் விருது, சிறந்த மனிதநேயர் விருது, சிறந்த பத்திரிகையாளர் விருது, சிறந்த சமூகசேவகர் விருது மேலும் பல எண்ணற்ற விருதுகளை நீதிபதிகள் மற்றும் மாவட்ட ஆட்சியர்களிடமிருந்தும் வழங்கப் பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

ம.பால்ராஜ் அவர்களது ஆயுளும், சேவையும் முடிவில்லாமல் இதுவரையில் தொடர்ந்து தொடர்வது போன்று மேலும் பல பல ஆண்டுகாலங்கள் மேலும் மேலும் முடிவில்லாமல் தொடரட்டும்.

கடந்த 25 ஆண்டு காலங்கள் தொடர்ந்து தொடர் சமூக சேவை செய்துவரும் லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேனல் சர்வதேச தலைவர் லார்ட்ஸ் ம.பால்ராஜ் அவர்களுக்கு திருச்சிராப்பள்ளி ராக்போர்ட் ஹோட்டலில் அமெரிக்க உலகத் தமிழ் பல்கலைக் கழகம் கௌரவித்து டாக்டர் பட்டம் அளித்து கௌரவப்படுத்தியது.

விருது வாங்கி பட்டமளிப்பு நடந்தவுடன் லார்ட்ஸ் டாக்டர் ம.பால்ராஜ் ஆற்றிய உரையில் கூறியதாவது.

திருச்சி மாநகரில் 2005 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரையில் இரண்டு ஆண்டு காலங்கள் தொடர்ந்து தொடர் கௌதம புத்தரைப் போன்று குடும்பத்தை விட்டு பிரிந்து வந்துதது போன்று வந்து தொடர் சமூகசேவைகளும் மாற்றுத்துத் திறனாளிகளுக்கும் ஏழைகளுக்கும் இலவச கம்ப்யூட்டர் தொழிற்கல்வி அளித்து வந்ததையும் எண்ணற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு பெற்றுத் தந்ததையும் சிறப்பு உரையில் எடுத்துக்கூறினார். மேலும் திருச்சியில் இரண்டு ஆண்டு காலம் தங்கி சமூக சேவைகள் செய்தபோது தனது குடும்பத்தை தாயாரை குழந்தைகளை அனைவரையும் விட்டு பிரிந்து வந்து தனியாக தங்கி இருந்து இரண்டு ஆண்டுகாலம் சமூக சேவை செய்ததையும் எடுத்துக் கூறி இந்த திருச்சியிலே தனக்கு பட்டமளிப்பு நிகழ்ந்தது கடவுளின் செயல் தான் என்று இதனால் தான் மிகவும் மகிழ்ச்சியும் பெருமையும் அடைவதாகவும் அந்த உரையில் கூறினார் அப்போது அரங்கில் உள்ளவர்கள் அனைவரும் மிகுந்த கைத்தட்டளுடன் கரஒளி எழுப்பி எழுந்து நின்று அனைவரும் சமூக சேவகர் லார்ட்ஸ் டாக்டர் ம.பால்ராஜ் அவர்களை பாராட்டினார்கள்.





# தமிழ் உலகமொழி




Lords Dr. மபால்ராஜ்
Founder | International President

உலகிலேயே தமிழ் மொழி தான் முதல் மொழி. 247 தமிழ் எழுத்துக்களில் இருந்து சுருக்கமாக்கப்பட்டு உருவாக்கப்பட்டதுதான் 26 ஆங்கில எழுத்துக்கள் ஆகும்.

தமிழ் எழுத்துக்களும் ஆங்கில எழுத்துக்களும் கலந்த உருவாக்கப்பட்டது தான் ஹிந்தி எழுத்துக்கள் ஆகும். தமிழ் எழுத்துக்களும் ஹிந்தி எழுத்துக்களும் கலந்து எழுதப்பட்டவை தான் தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய எழுத்துக்கள் ஆகும்.

இதை நீங்கள் எழுதி பழகி பயின்று பார்த்தால் உங்களுக்கும் தெளிவாக புரியும்.

உலகில் உள்ள அனைத்து மொழிகளுக்கும் தாய் மொழி தமிழ் மொழிதான் தமிழ் மொழி உலகம் தோன்றிய முதல் மனிதன் ஆதாம் ஏவாள் தோன்றிய காலத்தில் இருந்து இன்றுவரையில் அழிக்கப்படாமல் இருப்பதற்கு தாயையும் தாய்மொழியான தமிழையும் பனைமரம் ஏறுதல் குலதொழில்களையும் மறக்காத தமிழர்களாகிய எங்களின் முன்னோர்களும் நாங்களும் தான் முழு காரணம் என்பதனை உலக மனிதர்கள் அனைவரும் அறியவேண்டும்.

மேலும் தமிழ் மொழியை உலக மொழியாக உலக நாடுகள் அறிவிக்க வேண்டும் என்று லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல் சார்பாக உலக நாடுகளுக்கு வேண்டுகோள் விடுக்கின்றோம்.




அன்புடன்,

Lords Dr. மபால்ராஜ்
Founder | International President
**LORDS CLUBS INTERNATIONAL**
Govt. Reg. No. : 1359/2013
Ct. No. : +91 9840559673 | +91 9790855633
Web : www.lordsclubs.com
E-mail : lordsclubsinternational@gmail.com